

ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை, சென்னம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார்.



முதலமைச்சர் அவர்கள் சென்னையில் நடைபெறும் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாள் விழாவில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியதைத் தொடர்ந்து, சேலம், சோனா கல்லூரி வளாக கலையரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 5,664 பயனாளிகளுக்கு ரூ.14.04 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி ஆகியோர் உள்ளனர்.

### நீலகிரி மாவட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு

# 6,895 பயனாளிகளுக்கு ரூ.7.27 கோடியில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## அரசு தலைமைக் கொறடா கா. இராமச்சந்திரன் வழங்கினார்!

*நீலகிரி, டிச.11-*

நீலகிரி மாவட்டம், குன்னூர் புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில், அம்பேத்கார் நினைவு தினத்தையொட்டி நடைபெற்ற விழாவில்;, அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், 6,895 பயனாளிகளுக்கு ரூ.7.27 கோடி. மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவில், ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் 1 பயனாளிக்கு ரூ.7,240 மதிப்பீட்டில் சலவைப் பெட்டியினையும், பழங்குடியினர் நலத்துறை சார்பில் 20 பயனாளிக்கு வன உரிமைப்பட்டா தனிநபர் உரிமைபட்டாக்களையும், தாட்கோ மூலம் முதலமைச்சரின் ஆதிதிராவிடர்; மற்றும் சமூக பொருளாதார தொழில் நினைவு திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.216 கோடி மதிப்பிலும், பிரதான் மந்திரி அனுசுரித் ஜாதி அபியுதாய் திட்டத்தின் கீழ் 12 பயனாளிகளுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளையும், 36 தூய்மைப்பணியாளர்களுக்கு நலவாரிய அட்டைகளையும், நன்னிலம் மகளிர் நில உடமைத்திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.10 இலட்சம் மதிப்பிலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 19 பயனாளிகளுக்கு சாதி சான்றிதழ்களும்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில் 182 பயனாளிகளுக்கு ரூ.1.05 கோடி மதிப்பில் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன் உதவிகளும், 6,000 பயனாளிகளுக்கு சுய உதவிக்குழுக்களுக்கான அடையாள அட்டைகளும், 5 பயனாளிகளுக்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பில் சமுதாய முதலீட்டு நிதியுதவிகளும், 112 பயனாளிகளுக்கு வறுமை நிதியுதவிகளும், 20 பயனாளிகளுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பில் வாசனை நிரவிய பண்ணை தொகுப்பு நிதியுதவிகளும், 1] பயனானிகளுக்கு ரூ.77,000 மதிப்பில் வாழ்ந்து காட்டுவோம், நுண்தொழில் நிறுவன நிதியுதவிகளும், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 20 பயனாளிகளுக்கு ரூ.10.40 இலட்சம் மதிப்பில் விவசாய கடன் அட்டைகளும், 30 பயனாளிகளுக்குஆட்டுக்கொட்டகை அமைக்க ரூ.1.15 கோடி மதிப்பில் நிதியுதவிகளும் வணிகத்துறை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்தாடு தொழில் மாவட்ட தொழில் மையம் சார்பில் அண்ணால் அம்பேத்கார் தொழில் முன்னோடி திட்டத்தின் கீழ் 19 பயனாளிகளுக்கு ரூ.71 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளும், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.10.70 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூ.2.25 இலட்சம் மதிப்பில் பல்வேறு கடனுதவிகளும், மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் 50 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.46 இலட்சம் மதிப்பில் வங்கி கடனுதவிகளும், சமூக நலத்துறை சார்பில் 22 பயனாளிகளுக்கு பெண் குழத்தை பாதுகாப்பு முதிர்வு தொகை ரூ.11 இலட்சம் மதிப்பிலும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் ரூ.20 பயனாளிகளுக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் சட்டம் மற்றும் தத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டவர். இந்திய விடுதலைக்கு பின்னர் இந்தியாவின் முதலாவது சட்ட அமைச்சராகவும், பேராசிரியராகவும், வழக்கறிஞராகவும் பணியாற்றியவர். தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியல் உரிமைக்காகவும், சமூக விடுதலைக்காகவும் போராடியவர். இந்தியாவின் மிக உயர்ந்த குடிமகன் விருதான பாரத் ரத்னா விருது அம்பேத்காரின் மறைவுக்கு பின்னர் 1990 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இவர் “மதிப்பிற்குரிய தத்தை” என்று பொருள்படும் பாபாசாகேப் என்ற மரியாதைக்குரிய பெயராலும் குறிப்பிடப்படுகிறார். இதுபோன்று பல்வேறு சிறப்பு விருதுகளை பெற்ற அம்பேத்காரின் நினைவு தினம் என்பது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இந்த உலகம் உள்ள வரையிலும், இந்த மண் உள்ளவரையிலும் அம்பேத்கார் அவர்களை யாராலும் மறக்க முடியாது. அவர் மறைந்தும் மறையாமலும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பது தான் உண்மை.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, கூட்டுறவுத்துறையின் சார்பில், தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும்

மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கும் சிறப்பான திட்டம் ‘முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் ஆகும். அதேபோல், தமிழ்நாடு மாநில

வாழ்வாதார இயக்கம் சார்பில், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான மாபெரும் வங்கிக்கடன் இணைப்புகள் மற்றும் அடையாள அட்டைகள், தமிழ்நாட்டில் அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் (தமிழ்வழியில்) பயிலும் மாணவிகள் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பெறுவதை ஊக்குவிக்கும் நோக்கில், புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ் புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதந்தோறும் தலா ரூ.1,000 நிதியுதவி போன்ற திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், இன்றைய தினம் அம்பேத்கார் நினைவு தினத்தை முன்னிட்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி. யினர் நலத்துறை சார்பில், நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதனை தொடர்ந்து நமது மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தோட்டக்கலைத்துறை, வருவாய்

மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, சமூக நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில், 6895 பயனாளிகளுக்கு ரூ.7.27 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட ★ உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்தார்.

இந்திகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அபிலாஷா கௌர், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்)

மரு.ஜெயராமன், இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு. பாலகிருஷ்ணன் தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் திருமதி ஷபிலாமேரி, குன்னூர் நகராட்சி ஆணையாளர் இளம்பகுதி, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி பிரவீணாதேவி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குப்புராஜ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பீட்டர் ஞானராஜ், தாட்கோ மேலாளர் செல்வி ஆர்னிபோன், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) மணிகண்டன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திருமதி திலகவதி, குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள்

சந்திரசேகரன், குன்னூர் நகர்மன்ற தலைவர் திருமதி சுசீலா, பேரூராட்சி தலைவர்கள் திருமதி சித்ராதேவி (ஓவேலி) திருமதி சந்திரலேகா (பிக்கட்டி) திருமதி ராதா (உலிக்கல்) செல்வ வள்ளி (தேவர்சோலை) கலியமூர்த்தி ★ (நடுவட்டம்) திருமதி சத்தியவாணி (கீழ்க்குந்தா), திருமதி கௌரி (சோலூர்) திட்டக்குழு உறுப்பினர் திருராமசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### இளைஞர் எழுச்சி நாள் விழா:

# கரூரில் சைக்கிள் போட்டி - வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

*கரூர், டிச.11-*

கரூரில் இளைஞர் எழுச்சி நாள் விழா சைக்கிள் போட்டிகளை துவக்கி வைத்து கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கினார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், தமிழ்நாட்டிலிருந்து உலகத்தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் முனைப்பில் அயராது உழைத்திடும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை கொண்டாடும் வகையில், ரூ. 49 லட்சம் மதிப்பில் மொத்த பரிசுத் தொகையுடன், கரூர் மாவட்ட கழகம் சார்பில் விளையாட்டுப் போட்டிகள் நவம்பர் 15 ம் தேதி தொடங்கியது.

டிசம்பர் 28 வரை, கரூர் மாவட்டத்தில், கபடி, சிலம்பம், சதுரங்கம், கைப்பந்து, இறகுப்பந்து, கால்பந்து, சைக்கிள் ரேஸ், ஸ்கேட்டிங், மாரத்தான் மற்றும் கிரிக்கெட் என தொடர் விளையாட்டு போட்டி திருவிழாவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் சிலம்பம் ஆண் பெண்களுக்கான போட்டிகள், கபடி போட்டிகள், சதுரங்கம் போட்டிகள், ஆடவர் மகளிருக்கான மாரத்தான் போட்டிகள் சிறப்பாக நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த வகையில் கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் மாபெரும் சைக்கிள் போட்டிகள் நடைபெற்றன. கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, மொத்த பரிசுத்தொகை ரூ 85,000/- மற்றும் கோப்பைகளுக்கான, மாவட்ட அளவிலான சைக்கிள் பந்தயத்தை கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்.

முதல் பரிசு (ரூ 25000 மற்றும் கோப்பை) எம். ஹரிஷ், இரண்டாம் பரிசு (ரூ.20000 மற்றும் கோப்பை) பி. கோகுலகிருஷ்ணன், மூன்றாம் பரிசு (ரூ. 15000 மற்றும் கோப்பை) எஸ். அஷ்வின், நான்காம் பரிசு (ரூ. 10000 மற்றும் கோப்பை) கே. விக்னேஷ்வரன் மற்றும் 15 நபர்களுக்கு ஆறுதல் பரிசுகளை செந்தில் பாலாஜி வழங்கினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம் ஆர். இளங்கோ, க. சிவகாம சுந்தரி, கழகத்தின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக தொண்டர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இனி வரும் நாட்களில் நடைபெறவிருக்கும் போட்டிகள் விபரம்:

போட்டி : கிரிக்கெட் (ஆண்கள்),நாள்: 13.12. 2025 சனி முதல் 21.12.2025 ஞாயிறு வரை, நேரம்: காலை மணி 8.30, இடம்: திருவள்ளுவர் மைதானம், கரூர்.பரிசுத்தொகை: ரூ. 2,05,000.போட்டி : இறகுப்பந்து ( பெண்கள்) நாள் : 13.12.2025 சனி,நேரம் : காலை மணி 8.30, இடம்: ஆபிஸர்ஸ் க்ளப், கரூர். பரிசுத்தொகை: ரூ. 4,80,000, போட்டி: இறகுப்பந்து (ஆண்கள்), நாள் : 14.12.2025 ஞாயிறு,நேரம்: காலை மணி 8.30, இடம்: ஆபிஸர்ஸ் க்ளப், கரூர், பரிசுத்தொகை:ரூ. 4,80,000, போட்டி : TURF கிரிக்கெட் (ஆண்கள்)நாள்: 14.12.2025 ஞாயிறு, நேரம்:காலை மணி 8.30, இடம் : விருடர்ப், காந்திகிராமம், கரூர். பரிசுத்தொகை : ரூ. 70,000 போட்டி: கால்பந்து (ஆண்கள்),நாள்:14.12.2025 ஞாயிறு,நேரம் : காலை மணி 8.30, இடம் : FOURTY ELEVEN TURF, பெரியார் வளைவு, கரூர்.

பரிசுத்தொகை: ரூ. 70,000, போட்டி: வாலிபால் (ஆண்கள்), நாள்: 28.12.2025 ஞாயிறு, நேரம்: காலை மணி 8.30, இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர், பரிசுத்தொகை:ரூ. 1,72,000

மாபெரும் விளையாட்டு திருவிழாவில் கரூர் மாவட்ட சொந்தங்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார்.



துணை முதலமைச்சர் பிறந்ததினத்தை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.கார்த்திக் ஏற்பாட்டில் அரசு அங்கன்வாடி பள்ளியில் பாய் மின்விசிறி குழந்தைகளுக்கான எடை இயந்திரம் குழந்தைகள் பயன்படுத்தும் உபகரணம், இராசிபுரம் நகரம் காட்டூர் ரோடு அனைத்தும் கரங்கள் ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் காலை உணவு மற்றும் பயணிகள் ஆட்டோ தொழிலாளர்களுக்கு காக்கி சீருடை ஆகியவற்றை திமுக இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார், இராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஆர்.எஸ். ராஜாக்கனி

**டிசம்பர் 11 (2009)**



முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து விருதுநகர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

விருதுநகர் கூட்டுறவு வங்கித் தலைவராகப் பணியாற்றியவர்.

1986ல் மொழிப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ இருபத்தோரு முறை சிறை சென்றவர்.

“சிறைக்கும், சித்திரவதைக்கும் அஞ்சாத என் தம்பி ராஜாக்கனி” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காவனூர் மா.தாமோதரன்

**டிசம்பர் 11 (2015)**



பேரறிஞர் அண்ணாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கிளைச் செயலாளர், சித்தாமூர் ஒன்றியச் செயலாளர், மாவட்ட அணிகளின் அமைப்பாளராகப் பணியாற்றியவர்.

சூணாம்பேடு ஊராட்சி மன்றத் தலைவராக இரண்டு முறையும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு, சட்ட நகல் எரிப்பு, விலைவாசி உயர்வு, இலங்கைத் தமிழர் ஆதரவு உள்ளிட்ட பல போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ பத்து முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**